தினமணி

**துல்லிய பண்ணைத் திட்டத்தில் 2 மடங்கு மகசூல் அதிகரிப்பு**

First Published : 06 Jan 2010 08:03:26 AM IST

Last Updated : 06 Jan 2010 09:28:06 AM IST

பொள்ளாச்சி, ஜன. 5: துல்லிய பண்ணைத் திட்டத்தில் விளைபொருள்களின் உற்பத்தி 2 மடங்கு அதிகரித்துள்ளதாக திட்ட அலுவலர் டாக்டர் இ.வடிவேலு தெரிவித்தார்.

வாணவராயர் வேளாண் கல்லூரி சார்பாக பொள்ளாச்சி டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் உழவர் சிந்தனைக் களஞ்சியத்தின் சார்பில் துல்லிய பண்ணைத் திட்டம் குறித்த விளக்கக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடந்தது.

இதில் துல்லிய பண்ணைத் திட்டம் குறித்து திட்ட அலுவலர் டாக்டர் இ.வடிவேலு கூறியது:

இப்போதுள்ள சூழ்நிலையில் விவசாயம் செய்வதை விட நிலத்தை விற்றுவிட்டு அத்தொகையை வங்கியில் போட்டு வைப்பது சிறந்தது என்ற எண்ணம் பலருக்கும் வந்துள்ளது. விவசாயத்தை விட லாபம் தரும் தொழிலுக்குப் பலர் சென்றுவிட்டனர். விவசாய வேலை செய்வதற்கு ஆள்கள் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கிராமங்களில் உள்ள வயதானவர்கள் மட்டும் விவசாயப் பணியில் ஈடுபடுகின்றனர்.

ஆழ்குழாய்க் கிணறு இல்லாவிட்டால் விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 30 ஆண்டுகளில் உரம், பூச்சி மருந்து போன்ற இடுபொருள்கள் 300 சதவீதம் விலை உயர்ந்துள்ளது. ஆனால் விளைபொருள்கள் 30 சதவீதம் விலை உயர்ந்துள்ளது.

முன்பெல்லாம் விவசாயத் தொழில்நுட்பங்கள் எளிதில் புரியும்படியாக இருந்தது. ஆனால் இப்போது ஒருமுறை அறுவடை செய்தால் மட்டும் புரியுமாறு உள்ளது. அரசு அறிவிக்கும் பல்வேறு திட்டங்கள் மானியம் கிடைக்கும் வரை தொடரும். ஆனால் துல்லிய பண்ணைத் திட்டத்தில் விவசாயிகளிடம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இதை விவசாயிகள் விரும்பிக் கேட்கின்றனர். இத்திட்டத்தில் விவசாயிகளைக் குழுவாக இணைந்து செயல்படத் தூண்டி,
விளை பொருள்களுக்கு வாய்ப்புள்ள மார்க்கெட்டுடன் இணைத்து, விவசாயிகளிடம் ஆளுமையை ஏற்படுத்துவதைச் செய்கிறோம்.

துல்லிய பண்ணைத் திட்டத்தில் மகசூல் இரு மடங்காகிறது. 50 சதவீத மின்சாரம் மிச்சமாகிறது. கிடைக்கும் மகசூலில் 90 சதவீதம் முதல் தரத்தில் கிடைக்கிறது. காய்கறிகளின் எடையும் அதிகரித்துள்ளது. 15 நாள்கள் வரை காய்கறிகள் கெடுவதில்லை. 400 ஹெக்டேரில் துவங்கிய இத்திட்டம் இப்போது 40 ஆயிரம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது என்றார் வடிவேல். வாணவராயர் வேளாண் கல்வி நிறுவன இயக்குநர் கெம்புசெட்டி, முன்னோடி
விவசாயி ஓ.வி.ஆர். சோமசுந்தரம், ஆழியாறு வேளாண் ஆராய்ச்சி நிலையத் தலைவர் ராஜமாணிக்கம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். விவசாயிகளின் கேள்விகளுக்கு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் பதிலளித்தனர்.

**பி.டி. கத்தரி:அரசு அனுமதிக்குப் பிறகு அறிமுகம்**

First Published : 06 Jan 2010 08:14:04 AM IST

Last Updated : 06 Jan 2010 09:26:19 AM IST

கோவை, ஜன.5: வேளாண் பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ள நான்கு வகையான மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரி, அரசு அனுமதிக்குப் பிறகு வெளியிடப்படும் என்று துணைவேந்தர் ப.முருகேசபூபதி தெரிவித்தார். கோவை வேளாண் பல்கலை.யில் திங்கள்கிழமை துவங்கிய விதைகளில் ரகத் தூய்மை கண்டறியும் ஆய்வு குறித்த தேசிய அளவிலான பயிற்சியைத் துவக்கி வைத்து அவர் பேசியது:

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி விதை (பிடி பருத்தி) முழுமையான பரிசோதனைக்குப் பிறகே வெளியிடப்பட்டது. தற்போது பிடி பருத்தி பயிரிடப்படும் பரப்பு மொத்த அளவில் 90 சதமாக உயர்ந்துள்ளது. பிடி பருத்திக்கு பூச்சிக் கொல்லி மருந்துகளின் பயன்பாடு குறைந்திருக்கிறது.

மகசூல் ஹெக்டேருக்கு 308 கிலோவில் இருந்து 591 கிலோவாக உயர்ந்திருக்கிறது. உற்பத்தித் திறன் ஏறத்தாழ 32 லட்சம் பேல்களாக உயர்ந்துள்ளது.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட நான்கு வகை கத்தரி ரகங்களை வேளாண் பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ளது. அரசு அனுமதி கிடைத்த பிறகு இவை அறிமுகம் செய்யப்படும். மரபணு மாற்றத்துக்கு அடிப்படையான விதையின் தரமான மிகவும் முக்கியமானது.

மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் சுமார் 4,500 விவசாயிகள் போலி பிடி பருத்தி விதைகளின் பயன்படுத்தி ஏற்பட்ட பொருளாதார இழப்பினால் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக சர்வதேச உணவுப் பதப்படுத்தும் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

போலி விதைகளில் விதை முளைப்புத் திறன் குறைவதோடு, பூச்சி, பூஞ்சாணத் தாக்குதலும் அதிகரித்து மகசூல் வெகுவாகப் பாதிக்கிறது.

விதை வியாபார தொழில் ஈடுபட்டிருக்கும் பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இச்சூழலில் விவசாயிகளுக்கு விற்கப்படும் விதையின் தரம் பற்றி அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றார். வேளாண் பல்கலை. விதை மைய தனி அலுவலர் கி.ராமமூர்த்தி, விதை நுட்ப அறிவியல் துறைத் தலைவர் ப.ஷ்ரீமதி, பயிர் நோயியல் துறை பேராசிரியர் கு.பிரபாகர் உள்ளிட்டோர் பேசினர்.

தினகரன்

**பொங்கல் கரும்பு விலை ரூ.30 ஆக உயர்வு**

பதிவு செய்த நாள் 1/6/2010 6:29:57 AM



சென்னை : உற்பத்தி குறைவு காரணமாக பொங்கல் சீசனில் கரும்பு விலை கடுமையாக உயரும் அபாயம் உள்ளது. ஆண்டுதோறும் பொங்கலுக்கு சிதம்பரம், சேத்தியாதோப்பு, சீர்காழி, அல்லிவளாகம், மதுரை, திருச்சி ஆகிய ஊர்களில் இருந்து சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு கரும்பு வந்து சேரும். இந்த ஆண்டு பொங்கலுக்கு சில நாட்களே உள்ள நிலையில் கரும்பு வரத்து தொடங்கி உள்ளது.

இப்போது 7 லாரிகளில் கரும்புகள் வந்து சேர்ந்துள்ளன. ஒரு லாரியில் கட்டு 15 கரும்பு வீதம் 250 கட்டுகள் இருக்கும். சென்ற ஆண்டு டிசம்பரிலேயே கரும்பு வரத்து தொடங்கியது. இந்த ஆண்டு பருவ மழை தவறியதால் கரும்பு வரத்து தாமதமானது.

அதேபோல் சென்ற ஆண்டைவிட விலையும் இந்த ஆண்டு அதிகரித்துள்ளது. விலை உயர்வு, சேதாரம் ஆகியவற்றால் கரும்பு விலையை விவசாயிகள் உயர்த்தி உள்ளனர்.

கடந்த ஆண்டு ரூ.170க்கு விற்கப்பட்ட முதல் தர கரும்பு கட்டு, இப்போது ரூ.250 வரை விற்கப்படுகிறது. மதுரை கரும்பு ரூ.200 வரையிலும், மற்ற பகுதி கரும்புகள் ரூ.150 வரையிலும் விற்கப்படுகின்றன.

அதாவது, கடந்த ஆண்டு மொத்த வியா பாரிகளால், விவசாயிக ளிடம் இருந்து 5க்கு வாங் கப்பட்ட கரும்பு ரூ.10 வரை விற்கப்பட்டது. இந்த ஆண்டில் கொள்முதல் விலை ரூ.15க்கும் அதிகமாக உள் ளதால் கடைகளில் ஒரு கரும்பு விலை ரூ.30க்கு விற் கப்படும் என்றும் பொங்கல் அன்று ரூ50 வரை போக வாய்ப்பு உள்ளதாக வியாபா ரிகள் தெரிவித்தனர்.

**முட்டை வர்த்தகருக்கு 2009ல் அதிக லாபம்**

பதிவு செய்த நாள் 1/6/2010 12:16:17 AM



நாமக்கல் : கோழிப்பண்ணை வரலாற்றில் பண்ணையாளர்களுக்கு கடந்த ஆண்டு பொற்காலமாக திகழ்ந்தது. கடந்த ஆண்டுதான் நாமக்கல் மண்டலத்தில் முட்டைக்கு மிக அதிக விலை கிடைத்தது.

உற்பத்தி குறைவு, வட மாநிலங்களில் தேவை அதிகரிப்பு ஆகிய காரணங்களால் கடந்த ஆண்டு 100 முட்டைகளின் சராசரி விலை ரூ.225 ஆக இருந்தது. கடந்த 2008&ம் ஆண்டில் இது ரூ.177 ஆக மட்டுமே இருந்தது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஒரு முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல் மண்டலத்தில் 288 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. 30 ஆண்டு கால விலை நிர்ணய வரலாற்றில் இதுவே மிக அதிகபட்ச விலை. கடந்த ஆண்டில் சுமார் 6 மாத காலம் முட்டையின் உற்பத்திச் செலவை விட கொள்முதல் விலை அதிகம் இருந்ததால் கோழி பண்ணையாளர்கள் புதிய உத்வேகத்துடன் தொழிலில் ஈடுபட்டனர்.

இந்த ஆண்டின் தொடக்கமும் பண்ணைத் தொழிலில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. வடமாநிலங்களில் நிலவும் கடுமையான குளிரால் முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தற்போது முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை 253 காசுகளாக உள்ளது. முட்டை விலை தொடர்ந்து உயரும் வாய்ப்பு உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

நாமக்கல் மண்டலத்தில் 700க்கும் மேற்பட்ட கோழிப் பண்ணைகள் உள்ளன. தினசரி 2.4 கோடி முட்டை கள் உற்பத்தி செய்யப்பட்டு 50 லட்சம் முட்டைகள் ஏற்றுமதியாகின்றன.

**டெல்டா மாவட்டங்களில் 557 கொள்முதல் நிலையம்**

பதிவு செய்த நாள் 1/6/2010 12:41:07 AM



கும்பகோணம் : காவிரி டெல்டா மாவட்ட பாசனத்துக்காக மேட்டூரில் இருந்து ஜூலை 28ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து சம்பா, தாளடி சாகுபடி பணிகள் முழு வீச்சில் நடந்தன. தஞ்சை மாவட்டத்தில் 3,32,500 ஏக்கரிலும், நாகை மாவட்டத்தில் 2,81,431 ஏக்கரிலும், திருவாரூர் மாவட்டத்தில் 3,31,705 ஏக்கரிலும் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதேபோல், தஞ்சை மாவட்டத்தில் 1 லட்சம் ஏக்கர், நாகை மாவட்டத்தில் 1,60,246 ஏக்கர், திருவாரூர் மாவட்டத்தில் 33,175 ஏக்கரில் தாளடி சாகுபடி செய்யப்பட்டது.

இதில் தஞ்சை, திருவாரூர் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் சம்பா அறுவடை பணிகள் துவங்கி விட்டன. தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு, திருப்பனந்தாள், திருவிடைமருதூர், திருவாரூர் மாவட்டத்தில் நீடாமங்கலம், வலங்கைமான், மன்னார்குடி, நன்னிலம் பகுதிகளில் அறுவடை நடக்கிறது. பல இடங்களில் விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் விழுப்புரம், உளுந்தூர்பேட்டை, கடலூர், கரூர் ஆகிய இடங்களில் இருந்து அறுவடை இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்வதற்காக தஞ்சை மாவட்டத்தில் 182, நாகை மாவட்டத்தில் 230, திருவாரூர் மாவட்டத்தில் 145 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் பிச்சையா கூறுகையில், 'தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 182 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் த¤றக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டைப்போல் 357 இடங்களிலும் படிப்படியாக கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். அரசு அறிவித்தப்படி சன்ன ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,050, பொது ரகத்திற்கு ரூ.1,000 வழங்கப்படுகிறது. இதுவரை 12,853 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது' என்றார்.

திருவாரூர் வேளாண் இணை இயக்குனர் அன்பழகன் கூறுகையில், 'திருவாரூர் மாவட்டத்தில் தற்போது 145 இடங்களில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. மொத்தம் 350 இடங்களில் திறக்கப்பட உள்ளன. இதுவரை 3,000 ஏக்கரில் சம்பா அறுவடை முடிந்துள்ளது' என்றார்.

தினமலர்

- **மரபணு மாற்றப்பட்ட நான்கு கத்தரி ரகங்கள் கண்டுபிடிப்பு : வேளாண் பல்கலை துணைவேந்தர் தகவல்**

கோவை : ""மரபணு மாற்றப்பட்ட நான்கு வகை கத்தரி ரகங்களை வேளாண் பல்கலை கண்டுபிடித்துள்ளது. அரசு அனுமதித்தபின் புதிய ரகங்கள் வெளியிடப்படும்," என்று கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி கூறினார்.விதைகளில் ரகதூய்மை கண்டறியும் ஆய்வு பற்றிய தேசிய அளவிலான ஐந்து நாள் பயிற்சி, கோவை வேளாண் பல்கலையில் துவங்கியது. பயிற்சியின் துவக்க விழாவில் துணைவேந்தர் முருகேச பூபதி பேசியதாவது:பயிர் உற்பத்தி பெருக தரமான விதை முக்கியம். மரபணு மாற்றப்பட்ட பருத்தி, அதன் உயிர் பாதுகாப்பு பரிசோதனைக்குப் பிறகும், மகசூல் தன்மையை நிர்ணயித்த பின்பும் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது பருத்தி பயிரிடப்படும் மொத்த பரப்பளவில் சுமார் 80 சதவீதம் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி ரகங்களே பயிரிடப்படுகின்றன.இதனால் பூச்சிகொல்லி மருந்துகளின் பயன்பாடு குறைந் துள்ளது. பருத்தியின் மகசூல் ஒரு எக்டருக்கு 308 கிலோவில் இருந்து 591 கிலோவாக உயர்ந்துள்ளது. உற்பத்தி திறன் சுமார் 32.2 மில்லியன் பேல்கள் உயர்ந்து ஏற்றுமதி அதிகரித் துள்ளது.மரபணு மாற்றப்பட்ட நான்கு வகை கத்தரி ரகங்களை வேளாண் பல்கலை கண்டுபிடித்துள்ளது. அரசு அனுமதித்தபின் புதிய ரகங்கள் வெளியிடப்படும். இதனால் மரபணு மாற்றத்துக்கு அடிப்படையான விதையின் தரம் முக்கியம்.சர்வதேச உணவு பதப்படுத்தும் ஆராய்ச்சி நிலைய அறிக்கையின்படி, சுமார் 4,500 விவசாயிகள் மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திராவில் தரமற்ற மரபணு மாற்றப்பட்ட பருத்தி விதையை பயன்படுத்தியதால் ஏற்பட்ட பொருளாதார இழப்பு காரணமாக தற்கொலை செய்து கொண்டதாக கூறப்பட்டுள்ளது.

இந்த தரமற்ற விதைகளால் விதை முளைப்புத்திறன் குறைவதோடு, பூச்சி, பூஞ்சாணத் தாக்குதலும் அதிகரித்து, மகசூல் வெகுவாக பாதிக்கப்படுகிறது. 5,000 கோடி ரூபாய் முதலீட்டில் வளர்ந்து வரும் விதை வியாபாரத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. இந்த நிலையில், விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதையின் தரத்தில் அதிக கவனம் தேவை.இவ்வாறு, முருகேசபூபதி கூறினார்.பல்கலை விதை மைய தனி அலுவலர் ராமமூர்த்தி, விதை நுட்ப அறிவியல் துறைத் தலைவர் ஸ்ரீமதி, பயிர் நோயியல் துறை பேராசிரியர் பிரபாகர் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணிபுரியும் விதை நுட்ப விஞ்ஞானிகள், வேளாண் அலுவலர்கள், விதை ஆய்வு அலுவலர்கள் பங்கேற்றனர்.

- **கோவை மலர் கண்காட்சி 9ம் தேதி துவக்கம்**

கோவை: தமிழ்நாடு வேளாண் பல்கலை மற்றும் ரோட்டரி கிளப் ஆப் கோயமுத்தூர் அப்டவுன் அமைப்பு இணைந்து மூன்றாவது முறையாக, கோவை தாவரவியல் பூங்காவில் வரும் 9 மற்றும் 10ம் தேதிகளில் மாபெரும் மலர் கண்காட்சியை நடத்த உள்ளது.கண்காட்சியை, வேளாண் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் துவக்கி வைக்கிறார். மாநில அமைச்சர் பழனிச்சாமி, முனைவர் முருகேச பூபதி, மாவட்ட

கலெக்டர் உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர்.

மலர்கோலம், உலர் மலர், அழகு இலைகள், போன்சாய்மரம், மணமக்கள் மேடை போன்ற அலங்காரம்; மலர் கூறும் செய்தி, சிற்பங்கள் போன்ற அமைப்புகள் மலர் கண்காட்சியில், கோவை தாவரவியல் பூங்காவில் இடம் பெறுகிறது.பள்ளி மாணவர்களின் கவிதை, பூக்கோலம், போட்டோ மற்றும் ஓவியம் போட்டி மட்டுமல்லாமல் கல்லூரி, வீடுகள், அலுவலகங்களில் சிறந்த தோட்டங்கள் தேர்வு போட்டிகளில் வென்றவருக்கு வரும் 10ம் தேதி பரிசு வழங்கப்படுகிறது.வரும் சனி மற்றும் ஞாயிறு நடக்கும் இக்கண்காட்சியில் இடம்பெறும் அலங்காரக்கூடங்களில் 20 வகையான மலர்களும், 200 ரகங்களும் இடம்பெறுகிறது. காலை 9 மணி முதல் 5.30 மணி வரை பார்வையிடலாம். பெரியவர்களுக்கு 10 ரூபாயும், சிறியவர்களுக்கு 5 ரூபாயும் கட்டணம்; இன்று முதல் டிக்கெட்டுகளை தாவரவியல் பூங்காவில் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள் ளது.

---

- **இலவச கால்நடை பொது மருத்துவ முகாம்**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி, கோவிந்தகவுண்டனூரில் நடந்த இலவச கால்நடை பொது மருத்துவ முகாமில், ஆயிரம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.பொள்ளாச்சி கோட்ட கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கால்நடை பாதுகாப்பு திட்டத்தின் கீழ், கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை முகாம் கிணத்துக்கடவு கோவிந்தகவுண்டனூரில் நடந்தது.பொள்ளாச்சி கோட்ட கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் டாக்டர் நாகராஜன் முகாமை துவக்கி வைத்தார்.

முகாமில், கால்நடை மருத்துவ கிளை மருத்துவர்கள் ராஜா, கோவை நோய் புலனாய்வு பிரிவு டாக்டர் ராஜேந்திரன், கார்த்திகேயன், கோவில்பாளையம் கால்நடை ஆய்வாளர் துரைசாமி ஆகியோர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.இதில், 320 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியும், 420 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கமும், 20 கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டலும், 186 கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் தடுப்பூசியும் சிகிச்சையும் அளிக்கப்பட்டது.இது தவிர, 36 மாடுகளுக்கு மலடு நீக்க சிகிச்சையும், 58 கால்நடைகளுக்கு பொது சிகிச்சை அளிக்கப்பட்டது. முகாமிற்கு அழைத்து வரப்பட்ட 10 கிடேறி கன்றுகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. முகாமில், ஆயிரத்து 50 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட ஆவலப்பம்பட்டி ஊராட்டசியில் வரும் ஜன., 12ம் தேதி நடக்கிறது. இத்தகவலை பொள்ளாச்சி கோட்ட கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் நாகராஜன் தெரிவித்தார்.

---

- **பூச்சிக்கொல்லி மருந்தால் பாதிப்பு வேளாண்துறை அதிகாரிகள் ஆய்வு**

உடுமலை: பூச்சிக்கொல்லி மருந்து தெளித்த கொண்டைக்கடலை செடிகள் கருகியது குறித்து, வேளாண்பல்கலைகழக விஞ்ஞானிகள் குழுவினர் விளைநிலங்களில் ஆய்வு நடத்த உள்ளனர்.உடுமலை அருகேயுள்ள விருகல்பட்டி விவசாயி செல்வராஜ்; ஒன்பது ஏக்கரில் கொண்டைக்கடலை பயிரிட்டிருந்தார். புழுக்களை கட்டுப்படுத்த தனியார் மருந்து கடையில் மருந்து வாங்கி தெளித்துள்ளார். இரண்டு நாட்களில் செடியின் அடிப்பாகத்திலிருந்த இலைகள் பழுப்பு நிறத்திற்கு மாறி நுனி கருகியது. இது குறித்து பெதப்பம்பட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.வேளாண்துறை அதிகாரிகள் கூறியதாவது: மருந்தினால் பிரச்னை ஏற்பட்டிருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கோவை வேளாண்பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு ஆய்வு நடத்த உள்ளனர்.விஞ்ஞானிகள் ஆய்வு முடிவுகள் பெறப்பட்ட பின் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகள் தங்கள் பயிரில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விரிவாக்க மையத்தில் தெரிவித்து சாகுபடி ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்' என்றனர்.

- **நெகமம் கொப்பரை கிலோ ரூ. 32**

பொள்ளாச்சி: நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 32 ரூபாய் விலை கிடைத்தது.நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 16 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு, 113 மூட்டை கொப்பரை கொண்டு வந்தனர். முதல் தர கொப்பரை 35 மூட்டையும், இரண்டாம் தர கொப்பரை 78 மூட்டையும் இருந்தது.ஐந்து வியாபாரிகள் கொப்பரை ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலத்தை நடத்தினார்.முதல் தர கொப்பரை கிலோவுக்கு குறைந்தபட்சம் 28.25 ரூபாய் முதல், அதிகபட்சம் 32 வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை கிலோவுக்கு குறைந்தபட்சம் 19 ரூபாய் முதல், அதிகபட்சம் 28.10 வரை விலை கிடைத்தது.

- **மழை குறைவு: ஆழியாறு அணை நீர்மட்டம் சரிவு**

பொள்ளாச்சி: ஆழியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த ஒன்றரை மாதமாக மழைப்பொழிவு குறைந்துள்ள நிலையில், பாசனத்திற்கு தொடர்ந்து தண்ணீர் வழங்கப்பட்டு வருவதலால், அணை நீர்மட்டம் 12 அடி குறைந்துள்ளது.ஆழியாறு அணை மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் 650 ஹெக்டர் பரப்பில் அமைந்துள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 320 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள ஆழியாறு அணையில் 120 அடி உயரத்திற்கு 3,864 மில்லியன் கனஅடி தண்ணீர் தேக்கி வைக்க முடியும்.ஏற்கனவே, 118 அடி உயரத்திற்கு ஆழியாறு அணையில் தண்ணீர் இருந்தது. இந்நிலையில், அட்டகட்டி, மேல்ஆழியாறு, காடம்பாறை ஆகிய அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த நவம்பர் 6ம் தேதி கனமழை பெய்ததால் அணை நிரம்பியது.119.80 அடிக்கு நீர் தேக்கப்பட்டது. அணைக்கு வந்த நீர் அனைத்தும் ஆற்றில் திறந்து விடப்பட்டது. நவ., 20ம் தேதி வரையிலும் அணைக்கு வந்த தண்ணீர் முழுமையாக வெளியேற்றப்பட்டது.அதன்பின், நவம்பர் இறுதியில் ஆழியாறு அணையில் இருந்து பொள்ளாச்சி கால்வாய், வேட்டைக்காரன்புதூர் கால்வாயில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அதனால், ஆழியாறில் இருந்து விநாடிக்கு குறைந்த பட்சம் 300 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

இரண்டு நாட்களுக்கு ஒரு அடி வீதம் நீர்மட்டம் குறையத்துவங்கியது. நேற்றைய நிலவரப்படி ஆழியாறு அணையின் உச்ச மட்டத்தில் 12 அடி நீர்மட்டம் குறைந்து, 108.25 அடி நீர்மட்டம் உள்ளது. 3,061 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.அணைக்கு விநாடிக்கு 470 கனஅடி நீர் வரத்தும், அணையிலிருந்து 580 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. பொள்ளாச்சி கால்வாயில் 200 கனஅடியும், ஆற்றில் 380 கனஅடியும் நீர் திறந்து விடப்பட்டது. அணையில் 800 மில்லியன் கனஅடி தண்ணீர் குறைந்துள்ளது. ஜன., இறுதி வரையிலும் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது.பி.ஏ.பி., அதிகாரிகள் கூறுகையில், "ஆழியாறு அணையில் கடந்தாண்டு 250 நாட்களுக்கு மேல் நீர்மட்டம் 100 அடிக்கு குறையாமலிருந்தது. இந்தாண்டில், ஒன்றரை மாதமாக மழை இல்லாததால், 12 அடி குறைந்துள்ளது. 25 நாட்களுக்கு தண்ணீர் வழங்கினால் 12 அடி நீர்மட்டம் மேலும் குறையும். மழை பெய்து அணைக்கு நீர்வரத்து அதிகரித்தால் கடந்தாண்டை போல 100 அடிக்கு குறையாமல் நீர்மட்டம் இருக்கும்' என்றனர்.

- **வெல்லம் உற்பத்தி குறைவால் விலை உயர்வு**

பொள்ளாச்சி: பொங்கல் பண்டிகை நெருங்கி வருவதையொட்டி பொள்ளாச்சி வெல்ல மார்க்கெட்டில் வெல்லத்திற்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. போதிய வரத்து இல்லாததால், விலை உயர்ந்து வருகிறது.கேரளா, நெய்க்காரப்பட்டி, ஆனைமலை உட்பட பல்வேறு பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் வெல்லம் பொள்ளாச்சி வெல்ல மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்பட்டு, ஏலம் முறையில் விற்பனை செய்யப்படுகிறது. வெல்லத்தை ஏலம் எடுக்க வட மாநிலங்களை சேர்ந்த வியாபாரிகளும் பொள்ளாச்சிக்கு வருகின்றனர்.பொள்ளாச்சி பகுதியிலிருந்து கேரளா, மதுரை சுற்றுப்பகுதிகளுக்கும், குஜராத், சட்டீஸ்கர் உட்பட வட மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. வெல்ல மார்க்கெட் புதன் மற்றும் சனி கிழமைகளில் கூடும்.இந்நிலையில், பொங்கல் பண்டிகை நெருங்குவதையொட்டி, வெல்ல மார்க்கெட் சூடுப்பிடித்துள்ளது.

வெல்லத்திற்கான கிராக்கி அதிகரித்துள்ளதால், ஏல மார்க்கெட்டிற்கு வியாபாரிகள் வருகை அதிகரித்துள்ளது.பருவம் தவறிய மழை, கூலியாட்கள் பற்றாகுறை காரணமாக கரும்பு விளைச்சலும், வெல்லம் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், சந்தைக்கு 55 கிலோ எடை கொண்ட ஆயிரம் மூட்டைகள் மட்டுமே வரத்து உள்ளது.வழக்கமாக, பொங்கல் பண்டிகை நேரத்தில், இரண்டாயிரம் மூட்டை வரை வரத்து நிலவும். இதனால், வெல்லம் விலையும் மூட்டைக்கு 200 ரூபாய் உயர்ந்துள்ளது.கடந்த மாத வெல்லம் விலை நிலவரம் (மூட்டைக்கு): நயம் - 1,700, பச்சவெட்டு - 1,600, செங்கால் - 1,650, கருப்பு - 1,550, சிப்பம் (30 கிலோ) - 800 விலை நிலவியது.இம்மாத மார்க்கெட் நிலவரம்:நயம் - 1,900, பச்சவெட்டு - 1,800, செங்கால் - 1,800, கருப்பு - 1,750, சிப்பம் (30 கிலோ) - 1,000 என்ற விலையில் விற்பனையாகிறது.பொள்ளாச்சி வெல்ல உற்பத்தியாளர்கள் சங்க செயலாளர் சாகுல்அமீது கூறுகையில், ""பொங்கல் பண்டிகைக்கு வெல்ல தேவை அதிகரித்துள்ளதால், விலையும் உயர்ந்துள்ளது. தேவைக்கேற்ப உற்பத்தி இல்லை. பண்டிகை நெருங்கும் போது, விலை மேலும் உயரும் வாய்ப்புள்ளது. இந்த விலை உயர்வு இன்னும் இரண்டொரு மாதம் நீடிக்கும்'' என்றார்.

**பாமாயில், வெளிநாட்டு பழங்களின் விலை உயர்வு**

ஜனவரி 06,2010,09:33



மதுரை: சர்வதேச அளவில் சமையல் எண்ணெய் விலை உயர்வால் பாமாயில் விலை அதிகரித்துள்ளது. மதுரை எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி இதுகுறித்து கூறியதாவது : கடந்த வாரம் 650 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின் பாமாயில், நேற்று 670 ரூபாய்க்கு விற்கப்பட்டது. வனஸ்பதி 680 ரூபாயிலிருந்து 700 ரூபாயாகவும், தும்பை நல்லெண் ணெய் 1800 ரூபாயிலிருந்து 1820 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது. ரைஸ்பிரான் ஆயில் 730 ரூபாய், சூரியகாந்தி எண்ணெய் 840, கடலை எண்ணெய் 1080, நல்லெண்ணெய் 1350 ரூபாய் என்பதில் மாற்றமில்லை,

என்றார்.

இதேபோல, மதுரைக்கு வெளிநாட்டு பழங்களின் வரத்து குறைந்துள்ளதால், விலை அதிகரித்துள்ளது. ஒரு கிலோ ஆஸி., திராட்சை 300 ரூபாய், சீனா ஆப்பிள் 100, இதர ஆப்பிள்கள் 100110, வாஷிங்டன் ஆப்பிள் 140, காபூல் மாதுளை 100, சீட்லெஸ் மாதுளை 70, மஸ்கட் திராட்சை 100, சோனா திராட்சை 70, பன்னீர் திராட்சை 40, பப்பாளி 12, அன்னாசி 30, சீத்தாப்பழம் 40, சப்போட்டா 20, சாத்துக்குடி 60, கொடை மற்றும் மால்டா ஆரஞ்சு 50, மோரீஸ் வாழைப்பழம் 20, மலை வாழைப்பழம் ஒன்று 5, கிவி பழம் ஒன்று 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, என, யானைக்கல் வியாபாரி செந்தில் தெரிவித்தார்.

இதுதவிர, கடும் பனி காரணமாக, முருங்கைக் காய் உற்பத்தி குறைந்துள்ளதால், மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் நேற்று கிலோ 50 ரூபாய்க்கு விற்கப் பட்டது. பட்டர் பீன்ஸ் விலையும் 40 ரூபாயிலிருந்து 50 ரூபாயாக அதிகரித்துள்ளது.மற்ற காய்கறி விலை குறித்து, மார்க்கெட் சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது :

ஒரு கிலோ தக்காளி 15 ரூபாய், உருட்டு தக்காளி 10, கத்தரிக்காய 20, வெள்ளை கத்தரிக்காய் 15, பூசணிக் காய் 6, வெண்டைக்காய் 15, புடலங் காய் 9, பச்சை மிளகாய் 15, ஆந்திரா பச்சை மிளகாய் 10, பாகற்காய் 25, பெரிய பாகற்காய் 15, வெங்காயம் 20, பெரிய வெங்காயம் 18, இஞ்சி 30, காய்ந்தது 60, பீட்ரூட் 9, காலிபிளவர் 710, சுரைக்காய் 5, முட்டைகோஸ் 6, அவரை 15, பீன்ஸ் 16, சோயா பீன்ஸ் 40, பட்டாணி 25, கொத்தவரை 7, உருளை கிழங்கு 20, சேனை கிழங்கு 18, கருணை கிழங்கு 14,

கறிவேப்பிலை 12, கொத்தமல்லி 8, புதினா 6, கீரை வகைகள் 10, நூக்கல் 8, கேரட் 10, முள்ளங்கி 8 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, என்றார்.சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**கடந்தாண்டை விட இந்தாண்டு பருப்பு விளைச்சல் அதிகம்**

ஜனவரி 06,2010,01:37



மதுரை: இந்தியாவில் கடந்தாண்டை விட, இந்தாண்டு பருப்பு அதிகளவில் பயரிடப் பட்டுள்ளதால், விலை குறையும் என வியாபாரிகள் கருதுகின்றனர். பருவநிலை மாற்றத்தால், கடந்தாண்டு பருப்பு விளைச்சல் பாதிக்கப்பட்டு, உற்பத்தி குறைந்தது. குறிப்பாக, துவரம் பருப்பு விலை கடுமையாக உயர்ந்தது. இதனால், தான் சானியா, கனடா போன்ற நாடுகளிலிருந்து மத்திய அரசு இறக்குமதி செய்து, விலைவாசி உயர்வை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. வடகிழக்கு பருவமழையால், கடந்த மாதம் இந்தியா முழுவதும் பயறு வகைகள் அதிகமாக பயரிடப்பட்டுள்ளன. மத்திய பிரதேசம், உத்தரப்பிரதேசத்தில் அதிகமாக பயிரிடப் பட்டுள்ளதாக, மத்திய அரசு புள்ளிவிவரம் தெரிவித்துள்ளது.

கடந்தாண்டு கடலை 78.18 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டது. தற்போது 82.021 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. துவரை பயறு போல் தோற்றமளிக்கும் மசூர் பருப்பு 15.52 லட்சம் ஏக்கரிலும்(கடந்தாண்டு 13.788 லட்சம் ஏக்கர்), பட்டாணி 6.979 லட்சம் ஏக்கர் (7.823), உளுந்து 4.342 லட்சம் ஏக்கர் (4.271), பாசிப் பயறு 3.029 லட்சம் ஏக்கர் (2.658), துவரை 3.647 லட்சம் ஏக்கரில் (4.235) பயிரிடப்பட்டுள்ளது. இதனால், பருப்பு விலை குறையும் என, வியாபாரிகள் கருதுகின்றனர். அதேசமயம், ஒரு லட்சம் டன் மக்காச்சோளம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, துறைமுகங்களுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், மழை காரணமாக, அவை கெட்டுப் போனதால், ஏற்றுமதி செய்ய முடியாமல் வீணாக கிடக்கின்றன.

**'காஸ்ட்லி' பொங்கல் : பாத்திரம் முதல் ஏலக்காய் வரை விலை உயர்வு**

ஜனவரி 06,2010,00:00  IST



மதுரை : பொங்கல் பண்டிகைக்கு ஒன்பது நாட்களே உள்ள நிலையில், அரிசி, பால், வெல்லம் என பொங்கலுக்கு தேவையான பொருட்கள் அனைத்தும் விலை உயர்ந்துள்ளது. என்றாலும் "காஸ்ட்லி' பொங்கல் கொண்டாட மக்கள் தயாராகி விட்டனர்.

பருவநிலை மாற்றம், "ஆன்-லைன்' வர்த்தகத்தால் உணவுப் பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பால், காய்கறி உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்களை, வாங்க யோசிக்கும் அளவிற்கு விலை மூன்று மடங்கு வரை அதிகரித்து விட்டது. கிராமங்களில் மண்பானையில் பொங்கல் வைப்பது நமது பண்பாடு. கடந்த ஆண்டு மண்பானை ஒன்றின் விலை 16 ரூபாய். இந்த ஆண்டு 20 ரூபாய். நகரங்களில் பித்தளை பானையில் சர்க்கரை பொங்கல் தயார் செய்கின்றனர். கடந்தாண்டு ஒரு கிலோ 320 ரூபாய்க்கு விற்ற பித்தளை தகடு, இன்று 390 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சில வீடுகளில் எவர்சில்வர் பாத்திரத்தில் பொங்கல் வைப்பது வழக்கம். இதுவும் விலை உயர்ந்துள்ளது.

கடந்தாண்டு 115 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ எவர்சில்வர் தகடு, இன்று 130 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பொங்கலுக்கு தேவையான பச்சரிசி, கடந்தாண்டு கிலோ 18 ரூபாய்க்கு விற்கப் பட்டது. இந்தாண்டு 23 ரூபாய். மதுரை அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கச் செயலாளர் சந்திரன், "" நெல் விலையை மத்திய அரசு கிலோவிற்கு 8.50 ரூபாயாக நிர்ணயித்தது. தமிழக அரசு 10.50 ரூபாயாக அதிகரித்ததே அரிசி விலை உயர்வுக்கு காரணம். இரு வாரங்களில் அறுவடை துவங்கும் என்பதால், கிலோவிற்கு மூன்று ரூபாய் வரை குறைய வாய்ப்புள்ளது," என்றார்.

பாசிப் பருப்பு விலை ஒரு மடங்கு உயர்ந்துள்ளது. கடந்தாண்டு 48 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ பாசிப் பருப்பு, இன்று 90 ரூபாய்க்கு விற்கிறது. "ஆன்-லைன் வர்த்தகமே தொடர் விலை உயர்வுக்கு காரணம்,' என்கின்றனர்

பருப்பு வியாபாரிகள். பொங்கலுக்கு சுவைத்தரும் மண்டை வெல்லமும் விலை உயர்ந்துள்ளது. கடந்தாண்டு 280 ரூபாய்க்கு விற்ற 10 கிலோ மண்டை வெல்லம், இன்று 320 ரூபாய்க்கும், அச்சுவெல்லம் ஒரு கிலோ 350 ரூபாயில் இருந்து, 400 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. மதுரை வெல்லம் சர்க்கரை வணிக சங்கத் தலைவர் நித்யானந்தம், ""கடந்த ஆண்டு ரேஷன் கடைகளில் வெல்லம் இலவசமாக சப்ளை செய்யப்பட்டதால், விற்பனை மந்தமாக இருந்தது. தற்போது, விலை உயர்ந்தாலும் விற்பனை குறையவில்லை. கரும்பு விலை உயர்வே, வெல்லம் உயர்விற்கு காரணம்,'' என்றார்.

பொங்கலுக்கு சுவை கூட்டும் நெய் விலையும் அதிகரித்துள்ளது. கடந்தாண்டு, 260 ரூபாய்க்கு விற்ற ஒரு லிட்டர் நெய், இன்று 290 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. எண்ணெய் வியாபாரிகள் சங்கச் செயலாளர் சண்முகசுந்தரம், ""பால் விலை உயர்வு, நடைமுறை செலவு அதிகம், பரவலான தட்டுப்பாடே விலை உயர்வுக்கு காரணம்,'' என்றார். கடந்தாண்டு கிலோ 280 ரூபாய்க்கு விற்ற முந்திரி, இன்று 320 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. உலர் திராட்சை கிலோ 90 ரூபாயிலிருந்து 140 ரூபாய் வரையும், ஏலக்காய் கிலோ 800 ரூபாயில் இருந்து ஆயிரம் ரூபாய் வரையிலும் விற்கப்படுகிறது. பொங்கலுக்கு தேவையான அனைத்து பொருட்களும் விலை உயர்ந்துள்ளதால், இந்த பொங்கல் பண்டிகை "காஸ்ட்லியாக' அமையும். இதனால் பாதிக்கப்படுவது நடுத்தர மக்கள்தான். விலை உயர்வை கட்டுப்படுத்த சில கொள்கை முடிவுகளை அரசு எடுத்தால் பொங்கல் நிஜமாகவே "இனிக்கும்'.

# நெல்பயிரில் ஜிங்க் பற்றாக்குறை

***பற்றாக்குறை ஏற்படுவதேன்:*** நெல் சாகுபடியில் இயற்கை உரங்கள் குறிப்பாக பசுந்தாள் உரம், குப்பை, எரு இவைகளை உபயோகிக்காமல் அதிக அளவு ரசாயன உரங்களைப் பயன்படுத்துவது பற்றாக்குறையினைத் தோற்றுவிக்கின்றது. தண்ணீர் தேங்கக்கூடிய சூழ்நிலையிலும் பிரச்னை ஏற்படுகின்றது. களர் நிலத்தில் ஜிங்க் பற்றாக்குறை ஏற்படுகின்றது. பற்றாக்குறை ஏற்படுவதற்கு சுற்றுப்புற சூழ்நிலைகளும் காரணமாக உள்ளன. பல போக பயிர் சாகுபடி செய்யும் நிலையில் இரண்டாவது பயிர் பாதிக்கப்படுகின்றது. நெல் பயிர் சாகுபடியில் ஜிங்க் சத்து இடுவதற்கு போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை.

நெல் சாகுபடியில் அநேக விவசாயிகள் ஜிங்க் பற்றாக்குறை அறிகுறிகளை வியாதி அறிகுறிகள் என்று நினைத்துக்கொண்டு தவறுதலாக வியாதியைத் தடுக்கும் மருந்தினை அடித்து நஷ்டப்பட்டுள்ளனர். எனவே, பயிரில் ஏற்படும் அறிகுறிகளை நன்கு தெரிந்து அதற்கேற்றபடி மருந்தடிக்க வேண்டும். இதில் விவசாயிகள் தன்னிச்சையாக முடிவெடுக்காமல் அருகிலுள்ள நிபுணர்களை கலந்தாலோசித்து தாக்கப்பட்ட பூச்சி, வியாதி அறிந்து மருந்தடிப்பது சாலச்சிறந்ததாகும்.

**பற்றாக்குறை அறிகுறிகள்:** பயிர் நட்ட இடத்தில் வளர்ச்சி குன்றி காணப்படும் வயலில் காலியான இடங்கள் இருப்பது போன்ற காட்சி தெரியும். பயிர் தூர் கட்டுவதில் பாதிப்பு தெரியாது. இலை நுனி மஞ்சள் மற்றும் ஆரஞ்ச் நிறத்தை அடைவதுண்டு. இலை துருப்பிடித்தது போன்றுகூட காணப்படும். வளர்ந்த பயிரில் வளர்ச்சி ஒரே சீராக இருக்காது. பயிர் முதிர்ச்சியடைந்து அறுவடைக்கு வருவது தாமதப்படும். ஜிங்க் பற்றாக்குறை சூழ்நிலையில் விளைந்த நெல்மணிகள் அதிக அளவு ஈரம் கொண்ட நிலை இருந்துவரும்.

**களர் நிலத்தில் பிரச்னை:** செங்கல்பட்டுக்கு அருகிலுள்ள அரக்கோணத்தில் விவசாயி ஒருவர் தாளடியாக ஐ.ஆர்.50 சாகுபடி செய்தார். இந்த நிலம் களர் தன்மை வாய்ந்தது. களர் தன்மை 7.5 முதல் 8.2 வரை உள்ளது. இந்த வயலில் சாகுபடி காலத்தில் திட்டு திட்டாக ஐ.ஆர்.50 பயிர் வாட ஆரம்பித்தது. விவசாயி காஞ்சிபுரத்திலுள்ள களர், உவர் திருத்தும்




ஆராய்ச்சி நிலையத்துடன் தொடர்பு கொண்டார். அங்கு கிடைத்த சிபாரிசின்படி பயிரின் மேல் ஜிங்க் சல்பேட் கரைசலைத் (0.5 சதம்)தெளித்தார். பயிர் உடனே தெளிந்தது.

**பிரச்னையைத் தவிர்த்தல்:** இரு போக நஞ்சை நிலங்களில் இரண்டாவது பயிர் அடிக்கடி ஜிங்க் பற்றாக்குறையால் பாதிப்பதை அனுபவம் காட்டுகின்றது. இதுபோல நீர் தேங்கும் நிலங்களிலும், களர் நிலங்களிலும் பற்றாக்குறை தோன்றுகிறது.

சாதாரணமாக பிரச்னை தோன்றிய பிறகு தடுப்பு முறைகளை கையாளுவதை விட பிரச்னை வராமல் தடுப்பதுதான் புத்திசாலித்தனமாகும். பிரச்னையைத் தடுக்க நெல் நாற்றுக்களை நடும் முன் அவைகளின் வேர்களை 0.5 சதம் ஜிங்க் சல்பேட் கரைசலில் (500 கிராம் ஜிங்க் சல்பேட்டினை 100 லிட்டர் நீரில் கரைப்பது) ஒரு மணி நேரம் தோய்த்து எடுத்து நடலாம். இல்லையேல் நடவு வயலில் நாற்று நடும் முன் பரம்படிக்கும்போது ஜிங்க் சல்பேட் 12 கிலோ அளவினை 20 கிலோ மணலுடன் கலந்து வயலில் சீராகத் தூவ வேண்டும்.

ஜிங்க் சல்பேட்டினை என்.பி.கே. உரங்களுடன் கலந்து இடாமல் தனியாக இட வேண்டும். மேலும் ஜிங்க் சல்பேட்டினைப் பொடி செய்து உபயோகிக்க வேண்டும். வயலில் நட்ட பயிரில் அது வளர்ந்து வந்து கொண்டிருக்கும்போதே பிரச்னை தோன்றினால் ஜிங்க் சல்பேட் கரைசலினைப் பயிரின் மேல் தெளிக்க வேண்டும். கீழ்க்கண்ட வழிமுறைகள் பயன்தரும். இவைகளில் ஏதாவது ஒரு முறையை கையாளலாம்.

அ. பயிரின் மேல் 0.5 சத ஜிங்க் சல்பேட் கரைசலைத் தெளிக்கலாம். 500 கிராம் ஜிங்க் சல்பேட்டினை 100 லிட்டர் நீரில் கரைத்துப் பயிரின்மேல் தெளிக்கலாம். 0.5 சதக் கலவையைத் தயார் செய்யும்போது சுண்ணாம்பு பொதுவாக சேர்ப்பது கிடையாது. இருப்பினும் 250 கிராம் கிளிஞ்சல் சுண்ணாம்பினை சேர்க்கலாம். நல்ல பலன் கிட்டும்.

ஆ. ஜிங்க் சல்பேட், யூரியா கரைசல் தெளித்தும் பிரச்னையை சரி செய்யலாம். 2 கிலோ ஜிங்க் சல்பேட், 1 கிலோ கிளிஞ்சல் சுண்ணாம்பு மற்றும் அரைகிலோ யூரியா இவைகளை 10 லிட்டர் சுடுதண்ணீரில் கலக்க வேண்டும். இது கெட்டியாக வெண்ணெய் போல் மாறும். இதில் 10 லிட்டர் நீரினை ஊற்றி நன்கு கலக்க வேண்டும். பிறகு இதை வடிகட்டிவிட்டு தேவையான நீரினைக் கலந்து 200லிட்டர் கலவையை தயார் செய்து கைத்தெளிப்பான் கொண்டு ஒரு ஏக்கர் பயிருக்குத் தெளிக்க வேண்டும்.

இ. இரண்டரை கிலோ ஜிங்க் சல்பேட்டினை 30 லிட்டர் நீரில் கலந்துகொள்ள வேண்டும். இரண்டரை கிலோ கிளிஞ்சல் சுண்ணாம்பினை 30 லிட்டர் நீரில் கலந்து கொள்ள வேண்டும். ஜிங்க் சல்பேட்டின் கரைசலை சுண்ணாம்புக் கரைசலில் விட்டு பின் வடிகட்டி விசைத்தெளிப்பான் கொண்டு பயிருக்குத் தெளிக்க வேண்டும்.

நெல் பயிர் பிரச்னையைத் தடுக்க முன்னெச்சரிக்கையாக நடவின்போதே ஜிங்க் இடுவது நல்லது. ஏனெனில் பயிரில் பற்றாக்குறை தோன்றி அதை சரிசெய்ய ஜிங்க் தெளித்தாலும் ஓரளவு மகசூல் இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க இயலுவதில்லை. ஆகையால் மறுபடியும் விவசாயிகள் இதை உணர்ந்துகொள்ள வேண்டும். பிரச்னையைத் தடுப்பது அதை சரி செய்வதைவிட மேலானது.

**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

# நவீன தொழில்நுட்பம்

## தொடர் நெல் சாகுபடியில் ஊட்டச்சத்து மேலாண்மை

*ப*ல ஆண்டுகளாக பல மாவட்டங்களிலும் தொடர்ந்து தீவிர நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதனால் மண்ணிலுள்ள ஊட்டச்சத்துக்கள் குறைந்து பற்றாக்குறை ஏற்படுகிறது. இப்போது பெரும்பாலான நிலங்கள் முறையான ஊட்டச்சத்து நிர்வாகம் மற்றும் எதிர்மறையான ஊட்டச்சத்து அளித்தல், வெளியேறும் விகிதாச்சாரம் காணப்படுவதால் மண்ணில் கணிசமான அளவு ஊட்டச்சத்துக்களின் இழப்பு ஏற்பட்டு பயிர் மகசூல் குறைகிறது. இந்த ஊட்டச்சத்து பற்றாக்குறைகள் முன்கூட்டியே கண்டறியப்பட்டு தகுந்த உர நிர்வாகம் செய்தால் மட்டும் மகசூல் மாறும். ஊட்டச்சத்துக்களின் இழப்பினை கட்டுப்பாட்டில் வைக்க முடியும்.

இதன் பொருட்டு கோவை மாவட்டம் ஆனைமலை வட்டாரத்தில் 20 தொடர் நெல் சாகுபடி செய்யும் நிலங்களில் மூன்று ஆண்டுகள் விவசாயிகள் கடைபிடிக்கும் பயிர் உர நிற்வாகத்தினால் ஏற்படும் ஊட்டச் சத்து மாற்றங்கள் கண்காணிக்கப் பட்டது. ஆனைமலை வட்டாரத்தில் பொதுவாக ஆடுதுறை 36, அம்பை 16, அம்பை 18, கோ 43, கோ 45 மற்றும் வெள்ளைப் பொன்னி நெல் ரகங்கள் இரு பருவங் களிலும் பயிரிடப்பட்டு வருகின்றன.

அடிப்படைத் தகவல்களிலிருந்து இப்பகுதியிலுள்ள நெல் விவசாயிகள் பரிந்துரைக்கப்பட்ட உர அளவில் 16லிருந்து 20 சதவீதம் அதிகமான தழைச்சத்து (170 கிலோ / ஏக்கர்) மற்றும் கந்தகச்சத்தையும் (45 கிலோ / எக்டர்) தேவைக்கேற்ற மணிச்சத்தையும் (50 கிலோ / எக்டர்) 26 சதம் குறைவான சாம்பல் சத்தையும் (30 கிலோ / எக்டர்) பயன்படுத்துவது தெரியவந்தது.

மேலும் பசுந்தாள் உரங்களான சென்மேனியா, சணப்பை, தட்டைப்பயறு, கொள்ளு, எள் போன்ற பயிர்கள் கோடையில் விளைநிலங்களிலேயே பயிர் செய்து உழுது விடுகின்றனர்.

இரு பருவங்களிலும் பதிவு செய்யப் பட்ட சராசரி நெல் மகசூலானது முதல் பரு வத்தில் 4.74 டன் முதல் 6.07 டன் / எக்டர் என்ற அளவிலும் இரண்டாம் பருவத்தில் சத்து குறைந்த அளவாக 4.39லிருந்து 4.47 டன் / எக்டர் என்ற அளவிலும் காணப் பட்டது. முதல் பருவத்தில் அதிக தானிய மக சூலோடு மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட ஊட்டச்சத்துக்களின் அளவும் அதிகமாக காணப்பட்டது. முதல் பருவத்தில் அதிக தானிய மகசூலோடு மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட ஊட்டச்சத்துக்களின் அளவும் அதிகமாக காணப்பட்டது.

அறுவடைக்குப்பின் மேற்கொண்ட ஆய்வு முடிவுகளின்படி சராசரியாக எல்லா மண்வகைகளிலும் தழைச்சத்தின் அளவு 18.8 சதமும், மணிச்சத்தின் அளவு 12.3 சதமாகவும் குறைந்துள்ளது. ஆனால் சாம்பல் சத்தின் அளவு அதிகபட்சமாக 45 சதவீதத்திற்கும் மேல் குறைந்துள்ளது. இதற்கு காரணம் பரிந்துரைக்கப்பட்ட அளவை விட மிகக்குறைந்த சாம்பல் சத்து உரங்களை பயன்படுத்தியதே ஆகும்.

நுண்ணூட்டச் சத்துக்களைப் பொறுத்த மட்டில் மண்ணில் இரும்பு மற்றும் தாமிரத்தின் கிடக்கை தேவைக்கேற்ற அளவு இருந்தது. ஆனால் துத்தநாகம் மற்றும் போரான் கிடக்கை வெகுவாக குறைந்து பற்றாக்குறை காணப்பட்டது. 80 சத வீதத்திற்கும் அதிகமான நிலங்களில் துத்தநாக பற்றாக்குறை காணப்பட்டது. இது நெற்பயிரின் அதிக அளவு துத்தநாக தேவையையும் குறைந்த உரமிடுதலையும் குறிக்கிறது.

தொடர்ந்து நெல் பயிரிடும் விளை நிலங்களில் சமச்சீரான உர நிர்வாகம் மிக முக்கியமானதாகும். மேலும் தொடர் நெல் - நெல்பயிர் சுழற்சியால் பேரூட்டங்களோடு முக்கிய நுண்ணூட்டங்களான துத்தநாகம் மற்றும் போரானின் கணக்கீடு எதிர்மாறாக இருப்பதால் பற்றாக்குறை ஏற்பட்டு மகசூல் இழப்பு ஏற்படலாம். எனவே ஆனைமலை வட்டார விவசாயிகள் எக்டருக்கு 6.25 டன் பசுந்தாள் உரங்களுடன் பரிந்துரைக்கப் பட்ட ரசாயன உரங்களையும் (150:50:50:30 கிலோ) தழை, மணி, சாம்பல், கந்தகம் சத்துக்களுடன் 25 கிலோ துத்தநாக சல்பேட் மற்றும் 10 கிலோ போராக்ஸ் உரங்களையும் சேர்த்து இடுவதால் மகசூல் இழப்பை தடுப்பதோடு மண் வளத்தையும் பாதுகாக்கலாம்.(தகவல்: தி.சித்தேஸ்வரி, ப.ஸ்டாலின், த.முத்து மாணிக்கம், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியல் துறை, த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003).


**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

# பேப்பர் வாழை இலைகள்

பேப்பர் இலை தொடர்ந்து கிடைக்கிறது. எந்த சீசன்களிலும் தட்டுப்பாடு ஏற்படுவதில்லை. பேப்பர் இலை மளிகை, ஜெனரல் மெர்ச்சன்ட், டிபார்ட்மென்ட் ஸ்டோர்- ஹோட்டல்களில் கிடைக்கும். பேப்பர் இலைகளில் எந்தவித சேதமும் இருப்பதில்லை. பேப்பர் இலை முற்றிலும் சுகாதார பாதுகாப்பானது. ஏற்கனவே தூய்மைப் படுத்தப்பட்டு விட்டதால் தண்ணீர் தெளித்து கழுவ வேண்டிய அவசியமில்லை.

பேப்பர் இலையில் மடித்து வைக்கப்படும் சூடான உணவுப் பொருளில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. மாறாக உணவுப் பொருளின் ருசி அப்படியே இருக்கும். பேப்பர் இலை 100 டிகிரி செ. கொதிக்கும் நீரின் வெப்பத்தையே தாங்கிக் கொள்ளும் சக்தியுடையது. பேப்பர் இலை பார்சல் செய்யும் போது அடியில் நியூஸ் பேப்பர் வைத்து மடிக்கத் தேவையில்லை. பார்சல் செய்யும் நேரமும் செலவும் மிகவும் குறைகிறது. பேப்பர் இலை ஈரக்கசிவு என்ற பேச்சுக்கே இடமில்லை. அதனால் பார்சல் சிதைவதுமில்லை, சேதமாவதுமில்லை. பேப்பர் இலைகள் எத்தனை ஆண்டுகளானாலும் என்றும் தூய்மையானவை, மற்றும் பசுமையானவை. பேப்பர் இலையில் சாப்பிட்டு முடித்தவுடன் எப்படி வேண்டுமானாலும் மடித்து எடுக்கலாம். அவை கிழிவதில்லை. எனவே சாப்பிட்ட இடமும், ஆடைகளும் அசுத்தமாவதில்லை. பேப்பர் வாழை இலையின் பயன்களும், பயனடைவோரும்

அலுவலகம் செல்லும் அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் மதிய உணவை பார்சலாக எடுத்துச் செல்ல பார்சல் இலை சிறந்தது! பள்ளி செல்லும் குழந்தைகள், கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகள் மதிய உணவு கொண்டு செல்ல பார்சல் இலை பயன்மிக்கது! ஹோட்டல்கள் சிற்றுண்டி சாலைகள் மற்றும் உணவக உரிமையாளர்களுக்கு பார்சல் இலை, டிபன் இலை, சாப்பாட்டு இலை ஆகிய மூன்றும் லாபகரமானவை, வசதியானவை! சுற்றுலா மற்றும் பிக்னிக் செல்லும் பயணிகள் உணவுப் பண்டங்களை உடன்




கொண்டு செல்ல பார்சல் இலையும், வெளியிடங்களில் சாப்பிடுவதற்கு டிபன் இலையும் சிறந்தவை! புனித தலங்கள் மற்றும் பாத யாத்திரை செல்லும் யாத்ரிக அன்பர்கள் அவர் தம் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்ல பார்சல் இலைகள் மற்றும் டிபன் இலைகள் எளிதானவை! எதிர்பாரா விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரித்திட எல்லா இல்லத்தரசிகளுக்கும் டிபன் இலையும் சாப்பாட்டு இலையும் மிகவும் உபயோகமானவை! வீடுகளில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள், பண்டிகைகளில் டிபன் மற்றும் உணவுப் பண்டங்களை பரிமாறுவதற்கு டிபன் இலையும், சாப்பாட்டு இலையும் சிறப்பானவை! திருமணம், பொது விழாக்கள், அன்னதானம் போன்ற பெரிய வைபவங்களுக்கு பயன்படுத்த டிபன் இலை மற்றும் சாப்பாட்டு இலை புதுமையானவை, பொருளாதார சிக்கனமானவை! புதுக்கோட்டை-622 003. 04322 - 260 603, 94425 83383.

**- கே. சத்திய பிரபா,**
**4/164, எஸ்.எஸ்.காலனி,**
**உடுமலைபேட்டை.**

தினத் தந்தி

## *மரபணு மாற்றம் செய்யப்பட்ட மேலும் 4 வகை கத்தரி ரகம் கண்டுபிடிப்பு*

### *வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் தகவல்*

*கோவை,ஜன.6–*
*மரபணு மாற்றம் செய்யப்பட்டமேலும் 4 வகை கத்தரி ரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கூறினார்.*

***கருத்தரங்கு***

*கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழகத்தில் விதைகளில் ரகத்தூய்மை கண்டறியும் ஆய்வு குறித்த தேசிய அளவிலான 5 நாள் கருத்தரங்கு தொடக்கவிழா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. கலந்து கொண்ட அனைவரையும் விதைநுட்ப அறிவியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் ஸ்ரீமதி வரவேற்றார். இதில் பல்கலைக்கழக துணைவேந்தர் ப.முருகேசபூபதி கலந்து கொண்டு தரமான விதை உற்பத்தியின் முக்கியத்துவம் மற்றும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளின் இனத்தூய்மை குறித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–*

***பருத்தி மகசூல்***

*இன்றைய நிலையில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி ரகங்களே விவசாயிகளால் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. அந்த ரக பருத்தியில் அதன் உயிர் பாதுகாப்பு பரிசாதனை மற்றும் மகசூல் தன்மை ஆகியவைகளை நிர்ணயித்த பிறகே அவை வெளியிடப்படுகிறது. பருத்தி பயிரிடப்படும் மொத்த பரப்பளவான 80 சதவீதத்தில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி ரகங்களே அதிக அளவில் பயிரிடப்படுவதால் பூச்சி கொல்லி மருந்துகளின் உபயோகமானது பெருமளவில் குறைந்துள்ளது. மேலும் பருத்தியின் மகசூல் ஒரு எக்டேருக்கு 308 கிலோவில் இருந்து 591 கிலோவாகவும் உற்பத்தி திறன் சுமார் 32.2 மில்லியன் பேல் என்ற அளவில் உயர்ந்து ஏற்றுமதி அதிகரித்துள்ளது.*

***புதிய ரக கத்தரி***

*மரபணு மாற்றம் செய்யப்பட்ட கோ–2, எம்.டி.யூ–1, கே.கே.எம்–1, மற்றும் பி.எல்.ஆர்–1 என்ற 4 வகையான கத்தரி ரகங்களை வேளாண் பல்கலைக்கழகம் கண்டு பிடித்துள்ளது. அவை மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் வெளியிடப்படும். மரபணு மாற்றத்திற்கு அடிப்படை விதையின் தரமே ஆகும்.*

***போலி விதை***

*சர்வதேச உணவு பதப்படுத்தும் ஆராய்ச்சி நிலையத்தின் அறிக்கைபடி மராட்டியம், கர்நாடகம் மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களில் போலியான மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி விதைகளை உபயோகப்படுத்தியதன் காரணமாக ஏற்பட்ட பொருளாதார இழப்பினால் விவசாயிகள் பலர் தற்கொலை செய்து கொண்டனர். இந்த போலி விதைகளினால் விதை முளைப்புத்திறன் குறைவதோடு பூச்சி மற்றும் பூஞ்சாண தாக்குதல் ஏற்பட்டு மகசூல் பாதிக்கப்பட்டது. தற்போதைய நிலையில் சுமார் 5 ஆயிரம் கோடி முதலீட்டில் விதை வியாபாரத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இத்தகைய சூழலில் விவசாயிகளுக்கு விற்கப்படும் விதையின் தரம் பற்றி அதிக கவனம் செலுத்த வேளாண் விஞ்ஞானிகள் முன்வர வேண்டும்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

*பயிற்சி முகாமில் விதை மைய தனி அலுவலர் ராமமூர்த்தி, பயிர் நோயியல் துறை பேராசிரியர் பிரபாகர், விதை நுட்ப விஞ்ஞானிகள், வேளாண் அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.*